# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 22.04.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:** உண்மை, ஈமான் ஆகியவற்றின் காலம் மீண்டும் வர வேண்டும் என்பதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். மேலும் உள்ளங்களில் தக்வா உருவாக வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ளதாக வாதம் செய்கின்ற ஓர் அஹ்மதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், அவருக்காக கூறியுள்ள இந்த சொற்களை சிந்திக்க வேண்டும். அதற்கேற்ப தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இதை ஓர் அஹ்மதி செய்யும் போது தான் அது அவரை பையத்திற்குரிய உரிமையை நிறைவேற்றியவராக ஆக்குகின்றது. அவ்வாறில்லை என்றால் நாங்கள் அஹ்மதிகள் என்ற வாதம் மட்டும்தான் இருக்கும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கொண்டு வர விரும்பிய அந்த உண்மையும், ஈமானும் அல்லது எந்த நோக்கத்திற்காக அல்லாஹ் அவர்களை அனுப்பியுள்ளானோ அந்த நோக்கம் நிறைவேறும் போதுதான் உள்ளங்களில் தக்வா உருவாகின்றது. இது ஒரு புதிய விஷயமல்ல. உண்மை, ஈமான் ஆகியவற்றின் காலம் மீண்டும் வர வேண்டும் என்ற அவர்களது சொற்களிலிருந்து இது தெரிய வருகின்றது. அதாவது இந்த உண்மை, ஈமான், தக்வா ஆகியவற்றின் காலகட்டம் ஒரு சமயத்தில் இருந்தது. அது இப்போது இல்லாமல் ஆகி விட்டது. அதை மீண்டும் கொண்டு வருவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பணியாகும். நாம் எல்லாரும் அறிந்திருப்பது போன்றே இந்த உண்மை, தக்வா, ஈமான் ஆகியவற்றின் காலகட்டம் தனது மகத்தான மகிமையுடன் நமது எஜமானரும் தலைவருமாகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலகட்டத்தில் வெளிப்பட்டது. இறைவன் அவர்களை இந்த உலகிற்கு அனுப்பி ஷரீஅத்தை முழுமை பெறச் செய்தான்.

**இன்று உங்களது நன்மைக்காக உங்களது மார்க்கத்தை நான் நிறைவு செய்து விட்டேன். உங்கள் மீது எனது அருட்கொடையை நிறைவு செய்து விட்டேன். மேலும் உங்களுக்கான மார்க்கமாக இஸ்லாத்தை விரும்பியுள்ளேன்** என்ற அறிவிப்பை அல்லாஹ் செய்தான். அந்தக் காலகட்டத்தில் இவையெல்லாம் நடந்தன. இந்த விஷத்தில் எந்தவொரு அஹ்மதிக்கும் எந்த சந்தேகமும் இல்லை. இதற்கு மாற்றமாக அவர் எதையும் நினைப்பதில்லை. அதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைபெறச் செய்த அந்த உண்மையை, அந்த ஈமானை, அந்த தக்வாவை மீண்டும் நிலைபெறச் செய்வதற்காக திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப வரவேண்டியதிருந்தது. அவர்களும் வந்து விட்டார்கள். தனது தீய செயல்களின் விளைவாக முஸ்லிம்கள் இவற்றை இழந்து விட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம் என்று அஹ்மதிகளாகிய நாம் கூறும்போது திருக்குர்ஆனின் போதனைகள் நமக்கு வழங்கிய அந்த ஈமானை நாம் நம்மிடம் உருவாக்க முயற்சி செய்திருக்கின்றோமோ? சஹாபாக்கள் தங்களிடம் உருவாக்கிய அந்த ஈமானை உருவாக்க முயற்சி செய்கின்றோமோ? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் நம்பிக்கையாளர்களில் பெரும்பாலார் தங்களிடம் ஒரு புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியவாறு கடைபிடித்த அந்த உண்மையில் நிலைத்திருக்க நாம் முயற்சி செய்கின்றோமா? சஹாபாக்களின் வாழ்க்கை பற்றி நாம் படிக்கின்றபோது அல்லது கேட்கின்றபோது அவர்களிடமிருந்த அந்த தக்வாவை நமது உள்ளங்களில் ஏற்படுத்த நாம் முயற்சி செய்கின்றோமா?

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சஹாபாக்களின் வாழ்வில் நடைபெற்ற சம்பவங்களை இதற்காகவே நான் எடுத்துக்கூறி வருகின்றேன். உண்மை மற்றும் ஈமானின் காலம் மீண்டும்

வருவதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். மேலும் உள்ளங்களில் தக்வா உருவாக வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த சொற்களைக் கூறிய பிறகு தொடர்ந்து அவர்கள் கூறுகின்றார்கள். இந்த செயல்கள்தான் நான் தோன்றுவதற்குரிய உயர்வான நோக்கமாகும் என்று அவர்கள் கூறுகின்றார்கள். அவர்களது வருகையின் அடிப்படையான நோக்கம் இதுதான். தன்னை ஏற்றுக் கொண்டவர்களைப் பற்றி ஓரிடத்தில், எனது மரத்தின் பசுமையான கிளைகளே! என்று அவர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் குறிப்பிட்டுள்ள இந்த பணிகளை செய்பவர்கள்தான் உண்மையில் அவர்களது மரத்தின் பசுமையான கிளைகளாக இருக்கின்றார்கள். ஏனென்றால், தனது வருகையின் அடிப்படை நோக்கமாக அவர்கள் இதைத்தான் கூறியுள்ளார்கள். இனிமையான சுவையுள்ள கனிகளைத் தரக்கூடிய மரங்களின் கிளைகளிலிருந்து விஷம் நிறைந்த கனிகள் வர முடியாது. அவ்வாறே காய்ந்த கிளைகள் அம்மரத்தின் ஒரு பகுதியாக இருக்க முடியாது. அந்த மரத்தின் எஜமானன் காய்ந்த கிளைகளை ஒருபோதும் அந்த மரத்தில் இருக்கவிடமாட்டார். அதை வெட்டி தனியாக எடுத்து விடுவார்.

எனவே, இது மிகவும் அச்சப்பட வேண்டிய இடமாகும். பைஅத் செய்த பிறகு நமக்கு என்ன பொறுப்புகள் உள்ளன என்பதை நாம் எப்போதும் நமது மூளையில் பதிய வைக்க வேண்டும். பலரும் புதிதாக பைஅத் செய்து ஜமாஅத்தல் இணைகின்றனர். அவர்கள் பைஅத் செய்தது தொடர்பாக உள்ள சம்பவங்களை அல்லது நிலைமைகளை நான் கடிதங்கள் படிக்கின்ற போது அவை எனது ஈமானை மேலும் வளர்ச்சியடையும்படி செய்கிறது. ஆனால், நம்மில் பலரது மூதாதையர்கள் அஹ்மதிகளாக இருக்கின்றார்கள். அவர்களது சில நிலைமைகளைப் பற்றி சில நேரங்களில் எனக்கு தெரிய வரும் போது அதனால் எனக்கு துன்பமும் துயரமும் ஏற்படுகின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் போதனைகளுக்கேற்ப எந்த அளவு இஸ்லாமிய போதனைகளை செயல்படுத்துவதன் பக்கம் அவர்களுக்கு கவனம் ஏற்பட வேண்டுமோ அந்த அளவு அவர்களுக்கு கவனம் ஏற்படவில்லை. பிறப்பால் அஹ்மதியாக இருப்பது சில நேரங்களில் சிலரிடம் சோம்பேறித்தனத்தை உருவாக்கி விடுகின்றது. எனவே, நாம் ஒவ்வொருவரும் நமது உள்ளங்களை ஆய்வு செய்து பார்த்தவாறு செயல்பட வேண்டும். நாம் திரும்பி வர முடியாமல் நமது வழியை அடைத்து விடுகின்ற சோம்பேறித்தனத்தின் பக்கம் நாம் இழுத்துக் கொண்டு போகப்படுகின்றோமா? என்று பார்க்க வேண்டும். இறைவன், அவ்வாறு நாம் ஆகாமல் நம்மை தடுப்பானாக. நாம் பெயரளவில் மட்டும் அஹ்மதிகளாக இருக்கின்றோமா? என்பதை பார்க்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தங்களது கட்டளைகளில், தங்களது எழுத்துக்களில் பல்வேறு இடங்களில் இந்த விஷயத்தின் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். நாம் நம்மை ஆய்வு செய்து பார்த்துக் கொண்டிருந்தால்தான் அஹ்மதிய்யத்தின் உண்மையான ஆன்மாவை நாம் நிலைநாட்ட முடியும். நமது சொல்லிலும் செயலிலும் எவ்வித முரண்பாடும் இருக்கக் கூடாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கும் மற்றவர்களுக்குமிடையில் ஒரு தெளிவான வித்தியாசத்தைப் பார்க்க விரும்புகின்றார்கள்.

**ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் மீண்டும் மீண்டும் பலமுறை கூறிவிட்டேன். வெளிப்படையான பெயரைப் பொறுத்தவரையில் நம்முடைய ஜமாஅத்தும் ஏனைய முஸ்லிம்களும் ஒன்றுபோல் தான் இருக்கின்றோம். நீங்களும் முஸ்லிம்களாக இருக்கின்றீர்கள். அவர்களும் முஸ்லிம்கள் என்றே தங்களைக் கூறிக் கொள்கின்றார்கள். நீங்களும் கலிமாவை கூறுகின்றீர்கள். அவர்களும் கலிமாவை கூறுகின்றார்கள். நீங்களும் திருக்குர்ஆனைப் பின்பற்றுவதாகத்தான் வாதம் செய்கின்றீர்கள். அவர்களும் திருக்குர்ஆனைப் பின்பற்றுவதாகத்தான் வாதம் செய்கின்றார்கள். சுருக்கமாக சொல்வதென்றால், வாதம் செய்வதில் நீங்களும் அவர்களும் சமமானவர்களாக இருக்கின்றீர்கள். ஆனால், அந்த வாதத்தை நிரூபிக்கும் வகையிலுள்ள செயலளவிலான ஆதாரங்களும் செயலளவிலான நிலைமைகளின் மாற்றமும் இல்லாமல் வெறும் வாதங்கள் செய்வதால் மட்டும் அல்லாஹ் மகிழ்ச்சியடைவதில்லை. அதன் உண்மை நிலை வெளிப்பட வேண்டும். அதாவது, வாதங்கள் செய்த பிறகு செயலளவில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பது தென்பட வேண்டும்.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

இதன் காரணமாக பெரும்பாலான நேரங்களில் எனக்கு கடுமையான துக்கம் ஏற்படுகின்றது.

எனவே, நமது நிலைமைகளை நாமே ஆய்வு செய்து பார்க்கும்போதுதான் நாம் சிறந்த முறையில் நம்மை நாமே கணக்கிட்டுப் பார்க்க முடியும். மற்றவர்கள் தன்னைப் பற்றி கூறும்போது சில நேரங்களில் மனிதனுக்கு கோபம் வந்து விடுகிறது. அல்லது பிறர் நமக்கு புரிய வைக்கும் போது தனது சுய கௌரவம் பற்றிய கேள்வி உருவாகி விடுகின்றது. ஆனால், நம்மை நாமே ஆய்வு செய்து பார்ப்பதற்குள்ள நிபந்தனை என்னவென்றால் ஒவ்வொரு நொடியும் எல்லா சமயத்திலும் அல்லாஹ் என்னைப் பார்க்கின்றான் என்பது நமது எண்ணங்களில் இருக்க வேண்டும். நான் ஒரு பைஅத் உடன்படிக்கை செய்துள்ளேன். அதை நிறைவேற்றுவது எனது கடமையாகும் என்பதும் எண்ணங்களில் இருக்க வேண்டும். பிறகு மனிதன் சிறந்த முறையில் தன்னை கணக்கிட்டுப் பார்க்க முடியும்.

ஓர் அஹ்மதி எவ்வளவுதான் பலவீனமான ஒரு நபராக இருந்தாலும் கூட அவரிடம் நன்மையின் ஒரு சிறு ஒளியாவது இருக்கத்தான் செய்யும். அவருக்கு எப்போதெல்லாம் இதன் பக்கம் உணர்வு ஏற்படுமோ அப்போதெல்லாம் நன்மையின் ஒளி வெளிப்பட ஆரம்பிக்கின்றது.

எனவே, ஒவ்வொருவருக்கும் தனது நற்செயல்கள் என்ற தண்ணீர் மூலம் இந்த நன்மையை உயிரோடு வைக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. அவற்றைப் புத்தம் புதிய நிலையில் வைத்திருக்க வேண்டிய தேவை இருக்கின்றது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வேதனையை உணர வேண்டிய தேவை இருக்கின்றது. எவர்களுக்கு இந்த உணர்வு ஏற்பட்டு விடுமோ அவர்களது நிலைமை நாம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே காய்ந்த கிளை பசுமையின் கிளையாக மாறுவதற்கு ஒப்பாக இருக்கின்றது. பலரும் எனக்கு கடிதம் எழுதுகின்றார்கள். அந்த கடிதங்களில் அவர்களது மன வேதனை தென்படுகின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் பார்க்க விரும்புகின்ற அந்த தூய மாற்றம் எங்களிடம் ஏற்பட வேண்டும் என்று அவர்கள் எழுதுகின்றார்கள். எனவே, எவரெல்லாம் தங்களது இத்தகைய உணர்வை வெளியில் கொண்டு வர முயற்சி செய்கின்றார்களோ அவர்கள் அதற்காக அல்லாஹ்விடம் உதவி கேட்கின்றார்கள். பிறகு, ஒரு தாயை விட அதிகமாக தனது அடியாரை நேசிக்கின்ற அல்லாஹ் இவ்வாறு தன் பக்கம் வருபவர்களிடம் ஓடிச் சென்று அவர்களை தனது மார்போடு அணைத்துக் கொள்கின்றனர். பிறகு அப்படிப்பட்டவர்களது நிலை முற்றிலும் மாறி விடுகின்றது. நமது உலகையும் மறுமையையும் சரி செய்வதற்கான ஒரு அரிய வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான். இதிலிருந்தும் நாம் சரியான முறையில் பலன்பெறவில்லையென்றால் இது நமது துர்பாக்கிய நிலையாக இருக்கும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது உள்ளத்திலுள்ள அந்த துக்கத்தை எந்த சமயத்தில் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள் என்றால் அவர்களிடமிருந்து நேரடியாக அருள்களைப் பெற்று வந்த அன்னாரது சஹாபாக்கள் இருந்த அந்த காலத்தில்தான் தனது துக்கத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். அந்த சஹாபாக்களின் உயர்வான நல்ல முன்மாதிரி தொடர்பாக படிக்கும்போதும் கேட்கும் போதும் நமக்கு பெருமையாக இருக்கின்றது. எத்தகைய புரட்சிகரமான மாற்றங்களை அவர்கள் தங்களிடம் ஏற்படுத்திக் காட்டினார்கள்? ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது துக்கம் எந்த அளவு இருந்திருக்கின்றது என்பதை பாருங்கள். தன்னை ஏற்றுக் கொண்டவர்களின் தக்வாவின் தரம் தொடர்பாக அவர்களது எதிர்பார்ப்பு என்ன என்பதையும் பாருங்கள். அந்த சமயத்தில் கூட சிலரது நிலைமைகளைப் பார்க்கும் போது சில சமயங்களில் அதனால் எனக்கு கடுமையான துக்கம் ஏற்படுகின்றது என்று அவர்கள் கூறுகின்றார்கள். அத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நமது பலவீனங்களின் நிலைமையானது அவர்களுக்கு எத்தகைய துக்கத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்? **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இன்று நம்முடன் இல்லை. ஆனால், நமது நிலைமைகளைப் பற்றி அல்லாஹ் அவர்களுக்கு தெரிவிக்க முடியும். எந்தெந்த சஹாபி அல்லது பெரியவர் அல்லது அவர்களுக்கு நெருக்கமாக இருந்தவர்களின் பிள்ளைகளின் நிலை எவ்வாறெல்லாம்இருக்கின்றது? என்பதைப் பற்றி அல்லாஹ்**

**அவர்களுக்கு தெரிவிக்க முடியும்.** அந்த மக்கள் தீய சூழலிலிருந்து தங்களைப் பாதுகாத்தவாறு உலகை விட்டு விட்டு எப்போதும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்போம் என்ற உடன்படிக்கையை நிறைவேற்றும் வகையில் அவர்கள் தங்களது வாழ்க்கையை கழித்தார்கள். அப்படிப்பட்டவர்களில் சிலரது சந்ததிகளின் மார்க்க நிலை தற்போது பலவீனமடைந்து விட்டது. அதைப் பற்றி சிலருக்கு கவலையே இல்லாமல் இருக்கின்றது.

எனவே, நம்மை நாமே சரிசெய்து கொள்வதற்காக நமது சான்றோர்களின் நிலைமைகளை மீண்டும் நாம் நினைவு கூறிக்கொண்டே இருக்க வேண்டும். நமக்கு முன்னால் இருக்கும் நோக்கத்தை நாம் பெற வேண்டும் என்ற நிய்யத்துடன் பல அம்சங்கள் தொடர்பாக நாம் சிந்திக்க வேண்டும். அவர்கள் பைஅத் செய்ததற்கான காரணங்கள் நமக்கு தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் நாம் அவர்களது விருப்பங்களை நிறைவேற்றியவர்களாக இருப்போம்.

சில நாட்களுக்கு முன்பு நம்முடைய ஒரு பெரியவர் அப்துல் மூஃமின் கான் சாஹிப் தொடர்பாக ஒரு சம்பவத்தை அவரது மகன் என்னிடம் இவ்வாறு கூறினார். அப்துல் மூஃமின் சாஹிப் அவர்கள் அலிகார் பல்கலைக்கழகத்தில் B.Sc. Chemistry படித்து முடித்தார். அந்தக் காலத்தில் முஸ்லிம்களில் விஞ்ஞானத்தை தேர்ந்தெடுத்து படிக்கும் மாணவர்கள் மிகவும் குறைவாகவே இருந்தனர். இந்தப் பாடத்தில் நீங்கள் மிகப்பெரும் வெற்றியைப் பெற்றுள்ளீர்கள். எனவே, இந்த யுனிவர்சிட்டியிலேயே நீங்கள் வேலை பார்க்கலாம். வேலை பார்த்துக் கொண்டே தொடர்ந்து படிப்பையும் தொடரலாம் என்று யுனிவர்சிட்டியன் உயர் அதிகாரிகள் அவர்களிடம் கூறினார்கள். அவரது தந்தையாரும் தனது மகனுக்காக ஒரு ஆங்கிலேயரின் சிபாரிசை நாடியிருந்தார். அந்த சமயத்தில் இந்தியா, ஆங்கிலேய அரசாங்கத்தின் கீழ் தான் இருந்தது. அந்த ஆங்கிலேயரும் அவருக்கு ஒரு சிறந்த வேலைக்கான ஏற்பாட்டைச் செய்வதாக கூறியிருந்தார். பிறகு அவரிடம் நீங்கள் மிகுந்த புத்திகூர்மையுள்ளவராக இருக்கிறீர்கள். எனவே, இந்தியன் சிவில் சர்வீஸ் –ன் தேர்வை எழுதி அதில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள் என்ற ஆலோசனை கூறப்பட்டது. அந்த நாட்களில் கான் சாஹிப் அவர்கள் காதியான் வந்திருந்தார்கள். அது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலமாக இருந்தது. அவர்களிடம் கான் சாஹிப் தனது எல்லா விஷயங்களையும் எடுத்துக் கூறினார். பிறகு அவர்களிடம், ஹுஸூர் நான் உலக விஷயங்களில் விழ விரும்பவில்லை. நான் காதியானில் இருந்தவாறே காதியானின் தெருக்களில் துடப்பத்தை வைத்துப் பெருக்கி சுத்தம் செய்கின்ற வேலை எனக்கு கிடைத்தாலும் அதற்கு தான் இந்த உயர்வான வேலைகளுக்கு எதிரில் முன்னுரிமை வழங்குவேன் என்று அவர் கூறினார். இப்படிப்பட்ட சான்றோர்களும் இருந்திருக்கின்றார்கள். பிறகு அவர்கள் சஹாபாக்களிடமிருந்து அருள்களைப் பெற்றார்கள். கான் சாஹிப் விஞ்ஞான ஆசிரியராக நியமிக்கப்பட்டார். பிறகு அவர் நாஸிர் சாஹிப் பைத்துல் மால் ஆகவும் நியமிக்கப்பட்டார். அவர்கள் தான் முதலாவது நாஸிர் பைத்துல் மால் ஆக இருந்தார்கள் என்று நான் நினைக்கின்றேன்.

பழைய காலங்களில் வாழ்ந்த சான்றோர்களும் குறிப்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்களும் நன்மைகளில் முன்னேறிச் செல்பவர்களாக இருந்தார்கள். அவ்வாறிருந்தும் ஒருசிலரின் பலவீனமான நிலைமைகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பார்த்த போது நமது உள்ளம் இதனால் துக்கத்தில் ஆழ்ந்து விட்டது என்று கூறுகின்றார்கள். எனவே, நாம் நமது நிலைமைகளைப் பற்றி பார்க்க வேண்டிய தேவை மிகவும் அதிகமாக இருக்கின்றது. நாம் யாருடைய சந்ததிகள்? நமது சான்றோர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு எப்படிப்பட்ட தூய மாற்றங்களை தங்களிடம் உருவாக்கினார்கள்? என்பதைப் பற்றி நாம் சிந்தித்து நமது சான்றோர்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்தக்கூடாது என்று நாம் கருதினால் இது நமது சீர்திருத்தத்திற்குரிய ஒரு வழியாக ஆகி விடும். இது மிகச் சிறந்த முறையில் நமது தக்வாவின் தரத்தை உயர்த்தி விடும். நன்மைகளைச் செய்ய விருப்பமுடையவர்களாக நம்மை அது ஆக்கி விடும். உயிருள்ள சமுதாயங்களின் அடையாளம் இதுவேயாகும். அவர்களில் பழையவர்களும் தங்களது உயர் தகுதியை மரணிக்க விடுவதில்லை. அதற்கான சிறந்த

திட்டங்களைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றை நமக்காக வகுத்துத் தந்துள்ளனர். தங்களது தரத்தை உயர்த்திக் கொண்டே செல்கின்றனர். புதிதாக வருபவர்களும் ஒரு புதிய ஆன்மாவுடன் ஜமாஅத்தில் இணைகின்றார்கள். பழையவர்களின் உயர்வான தரத்தை அவர்கள் பார்க்கும் போது மேலும் முன்னேறிச் செல்வதற்கான ஆன்மா அவர்களிடம் உருவாகின்றது. இவ்வாறு நன்மைகளின் தரம் சமுதாய அளவில் உயர்ந்து கொண்டே செல்கிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு நாம் நமது நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியவாறு உலகிலும் ஒரு புரட்சியை உருவாக்குவோம் என்று நாம் வாதம் செய்கின்ற போது இதற்காக நாம் நிரந்தரமாக நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். நம்மைப் பற்றி மட்டுமல்லாமல் நமது மனைவி மக்களைப் பற்றியும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். மனைவி தனது கணவரின் நிலைமைகள், சொல், செயல் ஆகியவற்றைப் பற்றி எல்லாரையும் விட மிக சிறந்த முறையில் அறிந்தவளாக இருக்கின்றாள் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் எழுதியுள்ளார்கள். ஆண் சரியானவராக இருந்தால் பெண்ணும் சரியானவளாக இருப்பாள். அதற்கு மாற்றமாக இருந்தால் அந்தப் பெண் அவரது உருவம் தெரிகின்ற கண்ணாடியை அவருக்கு காட்டுவாள். என்னை சீர்திருத்த நீங்கள் என்ன முயற்சிகளைச் செய்தீர்கள்? முதலில் உங்களது நிலையை சரியாக்கிக் கொள்ளுங்கள் என்று அவள் கூறிவிடுவாள்.

எனவே, பெண்களை சீர்திருத்துவதற்கு ஆண்கள் தங்களது நிலைமைகளில் தூய மாற்றங்களை ஏற்படுத்துவது அவசியமாகும். பெண்கள் சீர்திருந்தி விட்டால் அடுத்த தலைமுறையினர் சீர்திருந்துவதற்கான உத்தரவாதம் நமக்கு கிடைத்து விடும் என்பதை எப்போதும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அடுத்த தலைமுறையினரிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் அவர்களை மார்க்கத்தில் நிலைபெறச் செய்வதற்கும் ஆண்கள் தங்களது நிலைமைகள் பற்றி எல்லாரையும் விட அதிகமாக கவனம் செலுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. பிறகு இந்த ஆண், பெண், தாய், தந்தை, கணவன், மனைவி ஆகியோரின் இந்த உயர்வான முன்மாதிரி அவர்களது பிள்ளைகளையும் இதன் பக்கம் கவனமூட்டக்கூடியதாக அமைந்து விடும். நமது உண்மையான நோக்கம் உலகத்தில் மூழ்கி விடுவதல்ல. மாறாக இறைவனின் திருப்தியைப் பெறுவதுதான் நமது உண்மையான நோக்கமாக இருக்க வேண்டும்.

இங்கு ஒரு விஷயத்தை விளக்கிக் கூற விரும்புகின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாக்களிடத்தில் அதிகமாக பலவீனங்கள் இருந்தன; அதன் காரணமாகத்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இவ்வாறு கூற வேண்டியது வந்தது (நவூதுபில்லாஹ்) என்று யாரும் நினைத்து விட வேண்டாம்.

அவர்களில் ஒரு சிலருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எதிர்பார்த்த அந்த உயர்வான தரத்தை முழுமையாக அடைய முடியாமல் இருந்தது. ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோ அந்த ஒரு சிலரிடம் கூட அந்த பலவீனங்களைப் பார்க்க விரும்பவில்லை. எந்த சபையில் அவர்கள் தமது இந்த துக்கத்தை எடுத்துக் கூறினார்களோ அதே சபையில் சிலரை பார்த்து விட்டு அவர்கள், நாம் பார்க்கின்றோம்; இந்த ஜமாஅத்தில் உள்ளவர்கள் மனத்தூய்மையிலும் அன்பிலும் மிகப்பெரும் முன்னேற்றத்தைப் பெற்றுள்ளனர். சில சமயங்களில் ஜமாஅத்தின் மனத்தூய்மை, அன்பு, ஈமானிலுள்ள வேகம் ஆகியவற்றைப் பார்த்து நமக்கே மிகுந்த ஆச்சர்யமும் வியப்பும் ஏற்படுகிறது.

ஆக இத்தகைய தமது ஈமானிய உணர்வை வெளிப்படுத்திக் காட்டிய பலர் இருந்தார்கள். இன்னும் சொல்வதென்றால் பெரும்பாலார் அப்படித்தான் இருந்தார்கள். எல்லாரும் அப்படித்தான் இருந்தார்கள் என்றுதான் நாம் கூற வேண்டும். நம்முடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவர்களது நிலை இப்படித்தான் இருந்தது. ஆனால், நபி தனது ஜமாஅத்தின் உயர்வான தரத்தைப் பார்க்க விரும்புகின்றார்.

நாம் வாழ்கின்ற இந்தக் காலத்தில் அல்லாஹ்வின் பல முன்னறிவிப்புகள் நிறைவேற வேண்டியதுள்ளது. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலமேயாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் அல்லாஹ் செய்துள்ள வாக்குறுதிகளில் பல வாக்குறுதிகளும் நிறைவேற வேண்டியதுள்ளது. இந்த வாக்குறுதிகள் நமது வாழ்நாளில் வெகு விரைவில் நிறைவேறி விடுவதை நாம் பார்க்க

விரும்பினால் நமக்கு நமது ஈமானின் உண்மை நிலை, தக்வாவின் தரம் ஆகியவற்றை கண்காணிக்க வேண்டியது வரும். அல்லாஹ் ஜமாஅத்தின் முன்னேற்றத்தை நமக்கு காட்ட வேண்டும் என்று நாம் விரும்பினால் நாம் அவனது திருப்தியை பெறுவதற்கு முயற்சிகளைச் செய்ய வேண்டியது வரும். இதையும் நான் கூறிக் கொள்கின்றேன். இந்தக் காலத்திலும் கூட அல்லாஹ்வின் அருளால் தங்களது மனத்தூய்மையிலும், பற்றிலும் முன்னேறியுள்ள பல மக்களும் இருக்கின்றார்கள். அவர்கள் அடுத்த தலைமுறையிடம் இந்த ஆன்மாவை ஊதுகின்றார்கள். நான் ஒரு முறை பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகள் தொடர்பாக எனது கவலையை வெளிப்படுத்திக் கூறியிருந்தேன். லாஹூரில் நடைபெற்ற சஹாதத்திற்குப் பிறகு அங்குள்ள காதிம்கள் அல்லது இரண்டாவது அணியிலுள்ள அன்ஸார்கள் அங்குள்ள ஜமாஅத் கட்டிடங்களில், பள்ளிவாசல்களில் டியூட்டி கொடுத்து வருகின்றார்கள். அவர்களில் சிலரைப் பற்றி அவர்கள் ஒரு நீண்ட காலகட்டம் டியூட்டி கொடுத்ததன் காரணமாக அவர்களிடம் சோர்வின் உணர்வு காணப்படுவதாக எனக்கு தகவல் கிடைத்தது. இது தொடர்பாக பாகிஸ்தானின் சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா காதிம்களுக்கு கவனமூட்டினார். அதற்கு பிறகு பாகிஸ்தானிலுள்ள குத்தாம்களிடமிருந்து அவர்களது மனத்தூய்மையை வெளிப்படுத்தும் பல கடிதங்கள் எனக்கு வந்தன. அதில் அவர்கள் இதற்கு முன்னரும் நாங்கள் ஒருபோதும் சோர்வடைந்ததில்லை. இனியும் அப்படிப்பட்ட எண்ணம் எங்களிடம் உருவாகாது. ஜமாஅத்திற்காக நாங்கள் கொடுக்கும் டியூட்டி எங்களுக்கு சுமையாக இருக்கிறது என்ற எண்ணம் எங்களிடம் உருவாகாது. நீங்கள் கவலைப்பட வேண்டாம் என்று அந்த காதிம்கள் எழுதியுள்ளனர்.

இதுபோன்றே பெண்களின் கடிதங்களும் எனக்கு வந்தன. எங்களது சகோதரர் அல்லது கணவர் அல்லது மகன் தங்களது வேலையை முடித்து திரும்பி வந்ததும் உடனடியாக ஜமாஅத்திற்கு டியூட்டி கொடுக்க சென்று விடுகின்றார்கள். நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் அவர்களை வழியனுப்பி வைக்கின்றோம். அல்லாஹ்வின் அருளால் நாங்கள் தனிமையில் இருந்தாலும் எங்களுக்கு எந்த அச்சமும் இல்லை என்று அவர்கள் எழுதியுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பது போல் இந்த மனத்தூய்மையும், பற்றும் அவர்களது ஈமானிய உணர்வின் காரணமாகத்தான் வெளிப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக இதையும் ஞாபகத்தில் வையுங்கள்.

இந்த கடமைகளைச் செய்யும் போது, டியூட்டி கொடுக்கின்ற போது உங்களது இறைவனை ஒருபோதும் மறந்து விடாதீர்கள். தொழுகைகளை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றுங்கள். டியூட்டி கொடுக்கும் போது இறைவனை நினைவு கூறுதல், துஆக்கள் ஆகியவற்றால் உங்களது நாவுகளை ஈரமாக வையுங்கள். நம்முடைய மிகப்பெரும் ஆற்றல் நமது இறைவனாவான். நமக்கு கிடைக்க வேண்டிய உதவிகள் அனைத்தும் இறைவனிடமிருந்தே கிடைக்கும். அவனது கட்டளைகளுக்கேற்பவே நாம் செய்ய வேண்டியவற்றை செய்கின்றோம். இறைவன் தான் நாடியதைச் செய்கின்றபோது எதிரிகளை அவன் பழிவாங்குவான். எனவே ஒருபோதும் துஆ செய்வதில் சோம்பேறிகளாக இருந்து விடாதீர்கள். துஆ, இறைவனை நினைவு கூறுதல் ஆகியவற்றின் தாக்கம் ஒவ்வொருவரிடமிருந்தும் செயலளவில் வெளிப்பட வேண்டும். அப்போதுதான் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு கூறியுள்ள அந்த உயர்வான தரத்தைப் பெற முடியும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ், இன்னல்லாஹ மஅல்ல தீனத்தகவ் வல்லதீனஹும் முஹ்ஸினூன் – தக்வா, தூய்மை ஆகியவற்றை கடைபிடிப்பவர்களுக்கு இறைவனின் உதவி கிடைக்கின்றது. எல்லா சமயத்திலும் கீழ்படியாமல் இருப்பதற்கு அவர்கள் மிகவும் அஞ் சி நடுங்கியவர்களாக இருப்பர் என்று கூறுகிறான்.

அல்லாஹ் மீதுள்ள அச்சமும் பயமும்தான் ஒவ்வொரு நொடியும் அடியாரைப் பாதுகாக்கின்றது. அந்த அடியார்களை உலக அச்சங்களிலிருந்தும் இறைவன் பாதுகாக்கின்றான். இறைவன் நம்மிடம் வெறுப்படைந்து விடக்கூடாதே என்ற அச்சம் மட்டும்தான் ஓர் அஹ்மதிக்கு இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இறைவன் என்னை நோக்கி இவ்வாறு கூறினான். நான் எனது ஜமாஅத்திற்கு இந்த தகவலை தெரிவிக்க வேண்டும் என்று கூறினான். எந்த மக்கள் ஈமான் கொண்டுள்ளார்களோ அவர்களது ஈமானில் உலகத்தின் கலப்படம் இல்லாமலும் நயவஞ்சகம், கோழைத்தனம் ஆகியவற்றால் அந்த ஈமான் அழுக்கடையாமலும் இருந்து அந்த ஈமான் கட்டுப்படுதலின் எந்தத் தகுதியையும் இழந்து விடாமலும் இருந்தால் அத்தகு ஈமான் கொள்கின்ற மக்களே இறைவனுக்கு பிரியமானவர்களாக இருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களது பாதங்களே உண்மையில் நிலைத்திருக்கும் பாதங்களாகும் என்று இறைவன் கூறுகின்றான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் பார்க்க விரும்புகின்ற அந்த ஈமானின் தரம் இதுவேயாகும். இந்த தரத்தை நம்மிடம் உருவாக்குபவர்களாக நாம் ஆவதற்கான நற்பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக.

இந்த மேற்கோளில் கட்டுப்படுவது தொடர்பாகவும் வந்துள்ளது. அது பற்றியும் இப்போது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஈமான் கீழ்படிதலின் எந்த தகுதியையும் இழக்காமல் இருக்க வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். கட்டுப்படுதலின் பல படித்தரங்கள் உள்ளன. அல்லது பல்வேறு நிலைகள் உள்ளன. பல்வேறு தரங்கள் உள்ளன. அவற்றின் பக்கம் நமது பார்வை இருக்க வேண்டும்.

ஜமாஅத் அமைப்புக்கு கட்டுப்படுதல் இருக்கின்றது. அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் கீழ்படிதலில் மிக உயர்வான நல்லுதாரணம் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மூலமாக நமக்கு தெரிய வருகிறது. உடடினயாக வரவும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து தந்தி வந்த சமயத்தில் அவர்கள் தங்களது மருத்துவமனையில் அமர்ந்திருந்தார்கள். அந்த நகரத்தைச் சார்ந்த எவரையும் அவர்கள் அழைக்கவில்லை. மாறாக, அழைப்பை ஏற்று அவர்கள் உடனடியாக செல்ல ஆரம்பித்தார்கள். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அப்போது தில்லியில் இருந்தார்கள். முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் காதியானில் இருந்தார்கள். நான் செல்கிறேன் என வீட்டிலுள்ளவர்களுக்கு செய்தி அனுப்பினார்கள். பயணத்திற்கான உணவு, உடை, செலவிற்கான பணம், பேக்கிங் போன்ற தேவைகளை கருத்தில் கொள்ளவில்லை. அவை அவசியம் என்று கருதவுமில்லை. நேரடியாக ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். ரயில் சிறிது தாமதமாக வந்தது. தனக்கு தெரிந்த ஒரு நபரை சந்தித்தார்கள். அவர் பணக்காரராக இருந்தார். அவர் தனது ஒரு நோயாளியைப் பார்க்க வரும்படி ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் வேண்டினார். ரயில் தாமதமானதால் அவர்களும் நோயாளியைப் பார்த்தார்கள். இந்த நோயாளியை பார்த்ததற்காக கொடுக்கப்பட்ட தொகை அவர்களது பயணச் செலவுக்கு உதவியது. இவ்வாறு அல்லாஹ் அவர்களுக்குரிய ஏற்பாட்டை செய்தான். அவர்கள் தனது எஜமானரிடம் சென்று சேர்ந்தார்கள். அங்கு சென்ற பிறகு தான் உடனடியாக வாருங்கள் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறவில்லை. தந்திக்கான வாசகத்தை எழுதியவர்தான் உடனடியாக வாருங்கள் என்று எழுதினார் என்பது அவர்களுக்கு தெரிய வந்தது. ஆனால், என்னை ஏன் இப்படி சிரமத்திற்கு ஆளாக்கினீர்கள்? நான் எவ்வளவு கஷ்டப்பட்டு வந்தேன்? என்ற முறையீட்டையும் அவர்கள் செய்யவில்லை. மிகவும் மகிழ்ச்சியுடன் அங்கு அமர்ந்திருந்தார்கள். இதுதான் கட்டுப்படுதலின் மிக உயர்ந்த தரமாகும். ஒவ்வொரு சிந்தனையும் ஒவ்வொரு கவலையும் கட்டளைக்கு எதிரில் ஒன்றுமற்றதாக ஆகிவிடுகிறது. பிறகு அல்லாஹ்வும் அதற்கான ஏற்பாட்டை உடனுக்குடன் செய்து கொடுத்தான். அப்படிப்பட்டவர்களைத்தான் நான் விரும்புவதாக அல்லாஹ் கூறுகின்றான்.

பிறகு ஜமாஅத்தின் அமைப்பு இருக்கின்றது. அதில் மிகச்சிறிய பொறுப்பாளர்களிலிருந்து காலத்தின் கலீஃபா வரை அனைவருக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். உண்மையில் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பதின் ஒரு தொடராக இது இருக்கின்றது. என்னால் நியமிக்கப்பட்ட அமீருக்கு கட்டுப்பட்டு நடப்பவர் எனக்கு கட்டுப்பட்டு நடப்பவர் ஆவார். எனக்கு கட்டுப்பட்டு நடப்பவர் இறைவனுக்கு கட்டுப்பட்டு நடக்கின்றார். ஜமாஅத் அமைப்புக்கு கட்டுப்பட்டு நடப்பதன் அடிப்படையான தகுதியைப் பெறுவதற்கு இது மிக மிக அவசியமானதாகும். சிறிய பொறுப்பாளர்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். உலக அடிப்படையில் பார்த்தாலும் அரசாங்கம் அல்லது ஒரு உலக அமைப்பை நடத்துவதற்கு ஒரு அமைப்பு செயல்படுகிறது. அதன் தேவை இருக்கின்றது. அது இல்லாமல் அமைப்பு செயல்பட முடியாது. உலக அரசாங்கங்களுக்குக் கூட ஒவ்வொரு நிலையிலும் அதன் அமைப்பை செயல்படுத்த சில சட்டங்களும் வழிமுறைகளும் இருக்கின்றன. அவற்றைப் பேணுவது அவசியமானதாகும். அரசாங்கத்திடம் சக்தி இருப்பதால், அது தனது சக்தியின் வலிமையைக் கொண்டும் அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் சட்டங்கள் மூலமாகவும் அந்த வழிமுறைகளை அமல்படுத்துகின்றன. ஆனால் ஒரு ஆன்மீக அமைப்பில் மனத்தூய்மையும், பற்றும் அல்லாஹ்வின் திருப்தியும் கட்டுப்படுதலின் அடித்தளமாக இருக்கின்றது. எனவேதான் இங்கு அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் ஒவ்வொரு நிலையிலும் கட்டுப்பட்டு நடப்பவர்கள்தான் எனக்கு விருப்பமானவர்கள் என்று கூறியுள்ளான். ஜமாஅத் அமைப்பிலுள்ள சின்னச் சின்ன தகுதிகளிலிருந்து உயர் தகுதிகள் வரையிலுள்ள அனைவருக்கும் யார் கட்டுப்பட்டு நடப்பார்களோ அவர்கள் இறைவனுடைய திருப்தியைப் பெறுவதற்காகவே அவ்வாறு செய்கின்றார்கள். அல்லாஹ் அஹ்மதிய்யா ஜமாஅத்திடம் கிலாஃபத் பற்றிய வாக்குறுதியை வழங்கியுள்ளான். திருக்குர்ஆனில் நம்பிக்கையாளர்களின் ஜமாஅத்தில் எந்த கிலாஃபத் தொடர்ந்து நிலைபெறும் என்று அல்லாஹ் வாக்குறுதி தந்துள்ளானோ அந்த கிலாஃபத் இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தில் மட்டும்தான் இருக்கின்றது. ஆயதே இஸ்திஃலாம் என்று அழைக்கப்படுகின்ற கிலாஃபத் தொடர்பான வாக்குறுதி அடங்கியுள்ள இந்த வசனங்களுக்கு முன்னதாக வருகின்ற வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்.

***நீர் அவர்களுக்கு கட்டளையிட்டால் உடனே அவர்கள் வீடுகளிலிருந்து கண்டிப்பாக புறப்பட்டு விடுவதாக அல்லாஹ்வின் மீது உறுதிவாய்ந்த சத்தியங்கள் செய்கின்றனர். நீர் கூறுவீராக! சத்தியங்கள் செய்யாதீர்கள். பொது வாக கட்டுப்பட்டு நடப்பதே போதுமானதாகும். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை எப்போதும் நன்கு தெரிந்து கொள்பவனாவான்.(24:54)***

இங்கு அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் கட்டுப்பட்டு நடக்கும் தன்மையின் பக்கம் நமக்கு கவனமூட்டியுள்ளான். நம்பிக்கையாளர்கள் எப்படி கட்டுப்பட்டு நடக்கின்றார்கள்? கட்டளையைக் கேட்டதும் சமிஃனா வஅஃனா நாங்கள் கேட்டோம்; மேலும் கட்டுப்பட்டு நடந்தோம் என்று அவர்கள் கூறுகின்றனர். எங்களது விருப்பத்திற்கு மாற்றமாக விஷயம் நடந்தாலும் விருப்பத்திற்கு ஏற்ப நடந்தாலும் கட்டுப்பட்டு நடப்பது நமது கடமையாகும். இதுதான் ஒரு மூஃமினிடம் இருக்க வேண்டிய உயர்ந்த தரமாகும். நீங்கள் மூஃமின்களாக இருந்தால் பெரும் பெரும் சத்தியங்கள் செய்ய வேண்டிய தேவை இல்லை. பொதுவாக கட்டுப்பட்டு நடத்தலே போதுமானதாகும். எந்த நல்ல தீர்மானம் எடுத்தாலும் அதற்கு கட்டுப்பட்டு நடப்பது அவசியமானது என்று கருதுகின்றோம் என ஒருபுறம் எழுந்து நின்று உறுதிமொழி எடுத்து விட்டு மறுபுறம் தீர்ப்புகள் வருகின்றபோது அதை செயல்படுத்துவதில் சாக்குப்போக்குகளைத் தேடினால் அது சரியல்ல. உண்மையான மூஃமின்கள் வெறும் சத்தியங்கள் மட்டும் செய்வதில்லை. மாறாக அவர்கள் எல்லா நிலையிலும் தங்களது கட்டுப்பட்டு நடக்கும் தன்மையை வெளிப்படுத்திக் காட்டுவார்கள். இங்கு நான் ஒரு விஷயத்தை விளக்கிக் கூற விரும்புகின்றேன். இதற்கு முன்பும் இதைப் பற்றி கூறியிருக்கின்றேன். நல்ல தீர்மானங்கள் என்று நாம் கூறும்போது நாம் நினைவில் கொள்ள வேண்டியது அஹ்மதிய்யா கிலாஃபத் இறைகட்டளைகளுக்கு மாற்றமான எந்த விஷயத்தையும் கூறாது. நல்ல தீர்மானம் என்பதன் பொருள், ஷரீஅத்திற்கேற்ப என்ன விஷயங்கள் கூறப்பட்டாலும் அதற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும். கிலாஃபத்தின்

தொடர் நபித்துவ வழியில் அதை பின்பற்றி வந்துள்ள கிலாஃபத் என்ற உறுதியில் நாம் நிலைத்திருந்தால் பிறகு ஷரீஅத்திற்கு எதிரான எந்த கட்டளையும் கிலாஃபத் தரப்பிலிருந்து கூறப்படாது என்பதிலும் நாம் உறுதியாக நிலைத்து நிற்க வேண்டும். இவ்வாறே ஜமாஅத்தின் அமைப்பு இருக்கின்றது. இவ்வாறே கிலாஃபத்தின் அமைப்பின் கீழ் ஒருவர் செயலாற்றும் போது அவரும் ஷரீஅத்திற்கு மாற்றமான எந்த கட்டளையையும் தரமாட்டார். அவ்வாறு அவர் ஏதாவதொரு காரணத்தால் ஷரீஅத்திற்கு மாற்றமாக கட்டளையிட்டால் அல்லது தவறுதலாக கட்டளையிட்டால் காலத்தின் கலீஃபா வரை அந்த விஷயம் எட்டும் போது காலத்தின் கலீஃபா அதனை சரிசெய்து விடுவார். கிலாஃபத் உறுதியாக நிலைத்து நிற்பதற்காக ஒரு அஹ்மதி துஆ செய்கின்ற போது அத்துடன் கட்டுப்படுதலின் உயர்வான தரத்தை நிலைநாட்டக்கூடியவனாக தான் திகழ வேண்டும் என்று தனக்காகவும் துஆ செய்ய வேண்டும். அதன் மூலம் அவர் அல்லாஹ்வின் விருப்பத்தை பெறக்கூடியவராக ஆகிவிடுவதற்கும் துஆ செய்ய வேண்டும். கிலாஃபத்தின் அருட்கொடையோடு இணைந்திருக்க துஆ செய்ய வேண்டும். எந்த நேர்வழியில் நான் நிலைத்து நிற்கின்றேனோ அதிலிருந்தும் விலகி நான் இழப்பிற்குரியவனாக ஆகிவிடக் கூடாது. அல்லாஹ்வே! என்னை இழப்பிற்குரியவனாக ஆக்கி விடாதே என்று துஆ செய்ய வேண்டும்.

சில நேரத்தில் சில மக்கள் தங்களது சுயநலம் காரணமாக ஜமாஅத் அமைப்பின் மீது தங்களுக்கு இருக்கும் அவநம்பிக்கையை வெளிப்படுத்திக் காட்டுகின்றார்கள். அதனால் இப்போது 1400 வருடங்களுக்குப் பிறகு அல்லாஹ் வழங்கியுள்ள அந்த அருட்கொடையிலிருந்தும் அவர்கள் புறக்கணிக்கப்பட்டவர்களாக ஆகி விடுகின்றார்கள. உதாரணமாக, ஜமாஅத்தின் நீதித்துறையுடன் சம்பந்தப்பட்ட சில விஷயங்களில் சில சட்டங்களைப் பேண வேண்டும் என்ற கட்டாய சூழ்நிலை ஏற்படும் போது ஜமாஅத்தின் நீதித்துறையின் இந்த தீர்ப்பை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கின்றேன். அதில் எவ்வித ஆட்சேபனையும் எனக்கு இல்லை எனறு எழுதித்தரும்படி நீதித்துறை சிலரிடம் கேட்கின்ற போது சிலர் அவ்வாறு எழுதித் தர மறுத்து விடுகின்றனர். தீர்ப்புகள் நமக்கு எதிராக அமையும் என்று தப்பெண்ணம் கொண்டவாறு அவர்கள் அவ்வாறு எழுதுவதற்கு மறுப்பு தெரிவிக்கின்றனர். நாங்கள் எழுத்தில் எதையும் தரமாட்டோம் என்று கூறிவிடுகின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கு ஆரம்பத்திலிருந்தே நல்ல நிய்யத் இருப்பதில்லை. அவ்வாறு ஏதாவது ஒரு பிரச்சனையை அவர்கள் நீளமானதாக ஆக்கி விடுகின்றார்கள். இங்கு இதற்கான தீர்ப்பு கிடைக்காவிட்டால் அரசாங்க நீதிமன்றத்திற்கு இதை கொண்டு செல்வோம் என்று அவர்கள் நினைக்கின்றனர். பிறகு ஜமாஅத்தின் நீதித்துறை கூறுவதைக் கேட்டு செயல்பட அவர்கள் மறுத்து விட்டு உலக நீதிமன்றங்களுக்கு இவர்கள் விஷயத்தைக் கொண்டு செல்கின்ற போது அங்கு இவர்களது விருப்பத்திற்கு மாற்றமாக தீர்ப்புகள் கூறப்பட்டால் பிறகு மீண்டும் ஜமாஅத்தின் நீதித்துறையின் பக்கம் வருவதற்கு அவர்கள் முயற்சி செய்கின்றனர். பிறகு அப்படிப்பட்டவர்களது பிரச்சனைகளை ஜமாஅத் தீர்த்து வைக்காது. ஏனென்றால் அவர்கள் முதலிலேயே கட்டுப்படுவதிலிருந்தும் விலகி வெளியே சென்று விடுகின்றார்கள். அவர்கள் ஜமாஅத் அமைப்பின் கீழ் நம்பிக்கை வைக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள் கட்டுப்படுவதலிருந்து விலகி வெளியே சென்று விட்டார்கள். அதனால் நான் அவர்களை விரும்பவில்லை என்று அல்லாஹ் கூறுகின்றான். ஒரு நபரை அல்லாஹ் வெறுக்கின்ற போது வெளிப்படையாக பார்க்கும் போது அந்த நபர் தான் ஜமாஅத்தின் ஒரு உறுப்பினர் என்று தன்னை கூறிக் கொண்டாலும் உண்மையில் அவர் ஜமாஅத்தின் பரக்கத் காரணமாக அல்லாஹ் ஜமாஅத்திலுள்ள நபர்களுக்கு வழங்கும் அந்த அருள்களை இழந்து விடுபவராக அவர் இருக்கின்றார். வெளிப்படையாக பார்க்கும் போது இவை சின்னச் சின்ன விஷயங்களாக தெரியும். ஆனால், தான் என்ற அகம்பாவம், தப்பெண்ணம் ஆகியவற்றின் காரணமாக இப்படிப்பட்ட நபர்கள் அல்லாஹ்வின் அருள்களிலிருந்தும் புறக்கணிக்கப்பட்டவர்களாக ஆகி விடுகின்றார்கள்.

எனவே, அல்லாஹ்விற்கு விருப்பமானவர்களாக ஆவதற்கு ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். இதில்தான் நாம் எஞ்சியிருப்பதும் நமது சந்ததிகள் எஞ்சியிருப்பதும் அடங்கியிருக்கின்றது. இத்துடன் நான் ஜமாஅத்தின் பொறுப்பாளர்களிடமும் கூறிக் கொள்கின்றேன். அவர்கள் நீதியின் எதிர்பார்ப்புகளை இறையச்சத்தோடு நிறைவேற்றும்போதுதான் கிலாஃபத்தின் உண்மையான பிரதிநிதிகள்

என்று அவர்களைப் பற்றி நாம் கூற முடியும். எந்தவொரு பொறுப்பாளரின் காரணமாக யாருக்காவது தடுமாற்றம் ஏற்பட்டால் அந்த பொறுப்பாளரும் குற்றமிழைத்தவராக ஆகின்றார். ஏனென்றால், இறைவன் அவரிடம் நம்பி ஒப்படைத்த அந்த அமானத்திற்குரிய உரிமையை அவர் செலுத்தவில்லை. அந்த பொறுப்பாளரின் தவறு காரணமாக ஒருவருக்கு தடுமாற்றம் ஏற்பட்டால் பொறுப்பாளர் தெரிந்து கொண்டே வேண்டுமென்றே அவரது தடுமாற்றத்திற்கு காரணமாக ஆகியிருந்தால் நிச்சயமாக அவர் குற்றவாளியாவார்.

ஓர் அஹ்மதி எந்த இடத்தில் இருந்தாலும் அவர் தனது பைஅத் உடன்படிக்கையில் நிலைத்திருக்கவும் தனது ஈமானில் நிலைத்திருக்கவும் எல்லா நிலையிலும் உண்மையையும் தக்வாவையும் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். அதன் மூலமாக அவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை நிறைவு செய்பவராக ஆகி விடுகின்றார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

ஜமாஅத்தில் உள்ளவர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதைப் பார்த்து நான் ஒருபோதும் மகிழ்ச்சியடைய மாட்டேன். கை மேல் கை வைத்து பைஅத் செய்வது மட்டும் உண்மையான ஜமாஅத் என்பதன் பொருளாக முடியாது. மாறாக உண்மையான முறையில் இவர்களிடம் ஒரு தூய மாறுதல் ஏற்பட வேண்டும். அவர்களது வாழ்க்கை பாவங்களிலிருந்தும் அழுக்குகளிலிருந்தும் விலகி தூய்மையானதாக இருக்க வேண்டும். மனதின் சொந்த விருப்பங்கள் மற்றும் ஷய்த்தானின் பிடியிலிருந்து விலகி இறைவனது திருப்தியில் அவர்கள் அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் அவனது அடியார்களுக்குரிய உரிமைகளையும் திறந்த உள்ளத்துடன் முழுமையாக செலுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும். மார்க்கத்திற்காகவும் மார்க்கத்தைப் பரப்புவதற்காகவும் அவர்களிடம் ஒரு துடிப்பு உருவாகி விட வேண்டும். தங்களது விருப்பங்களையும், ஆசைகளையும் அழித்துவிட்டு இறைவனுக்காக அவர்கள் ஆகி விட வேண்டும்.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

எவர் இறைவனுக்கு அஞ்சியவராக இறைவனது நாட்டத்திற்கு மாற்றமாக இருக்கும் விஷயங்களை விட்டு விடுவார்களோ அவர்கள்தான் இறையச்சமுள்ளவர்கள் ஆவர். தமது நஃப்ஸையும் நமது நஃப்ஸின் விருப்பங்களையும் உலகத்தையும் அதில் இருப்பவற்றையும் அல்லாஹ்விற்கு எதிரில் ஒன்றுமற்றதாக அவர் கருத வேண்டும்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருப்பத்திற்கேற்ப நமது வாழ்நாளை கழிப்பதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 22.04.2011**

Translated by : **Maulvi M. RAFEEQ AHMAD H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**